ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

உண்மையில் சரீராதிகளைத்தவிர வேறுபட்டு ஸச்சிதானந்த வடிவமாய் விளங்கும் ஜீவன் எக்காரணம் பற்றியோ அவ்வுண்மை அறியாமையால் சரீரத்தையே நானென்றும், அதன் தர்மங்களையும் அதைச் சேர்ந்தவைகளையும் தன்னுடையதென்றும் நினைத்து அந்தமோஹத்தாலேற்பட்ட ராகத்துவேஷங்களால் பிரேரிக்கப்பட்டு நல்வினை தீவினைகளைச் செய்து ஸ்வர்க்க நரகங்களை யனுபவித்துச்சம்ஸாரியாக மேலும் கீழுமாகச் சஞ்சரித்துக் கொண்டுவருகையில் ஓர் ஸந்தர்ப்பத்தில் கர்மபூமியில் செய்த புண்ணியங்களின் பயனை விண்ணுலகத்தில் அனுபவித்து முடிந்தபிறகு பிராரப்தமான புண்ணியந்துலைந்திடவே, ஸஞ்சித புண்ணியசேஷத்தால் புனிதமான பூலோகத்தை யடைவான். அங்கு கர்மாவுக்குத் தக்கபடி கடவுளாலமைக்கப்பட்ட ஒரு சரீரத்தை யெடுப்பான். எடுத்த சரீரத்தில் மிக்கவன்புடன் வாழ்வான். அதில் சுபகர்மங்களைச் செய்திடுவானுகில் சுபபலனையேபெறுவான். அவனது வாழ்நாளைச் சிறிது கவனிப்போமானுல் கவலைக்கிடமாகிறது, மனிதர்களுக்கு பரமாயுஸ்ஸு நூறென்றுஅளக்கப்பட்டது.இரவில் அதில்பாதி தூக்கத்திலொழிகின்றது. பாதியிற்பாதி பால்யத்திலும்,விருத்தத்துவத்திலும்தொலைகின்றதுமற்றதுவியாதிவியோகம்துக்கம்-ஸேவை முதலியவைகளால் முடிகின்றது. ஆகவே நீர்க்குமிழி போன்ற இச்சரீரத்தில் ஜீவனுக்கு சுகமேதுஎன்றுரான்றோர். இத்தகைய குருகிய காலத்தில் மனிதன் கிருதார்த்தனென்று பெரும்மகிழ்ச்சிபெறுகிறுன். உற்று நோக்கில் இரவிலொழியும் ஐம்பதுவருடங்கள்அனேகமாய்ச் சிறிதும் பயன்படுவதில்லை. அச்சமயம் மனிதருக்குத்துயலுங்காலமாகையால் எந்த இம்மை மறுமைச்சாதனங்களையும் தேட இடமேதுமில்லை. ஆகவே அச்சமயம் புருஷார்த்தங்களைத் தேடிக்கொள்ளமுடியாத காலமாகும். இவ்விஷயம் தினந்தோறும் எல்லோரும் அனுபவிப்பதாகையால் இதைப்பற்றி அதிகமெழுத வேண்டுவதில்லை, எஞ்சியுள்ள கொஞ்சகாலத்தில் கவனிக்காமல் கண்டகார்யங்களைச் செய்து கொண்டிருந்தால் நற்கதி பெறுவதெப்படி? இங்கு கண்டதே காக்ஷி-கொண்டதே கோலமென்னும் நாஸ்திகக்கொள்கை ஆஸ்திகர்களாலாதரிக்கத் தக்கதில்லை. மேலானபயனைப் பெறுவதற்கு வைதிகதர்மமே சிறந்த ஸாதனமெனச் சாஸ்திரம் கூறுவதை யுக்தி வாதங்களால் மறுக்கமுடியாது. பரலோகமுண்டெனக் கண்டுணர்ந்த வேதங் கூறுவதே பரலோக ஸாதனமாகுமேயன்றி வேறெவர் சொல்லுவதும் சரியான சாதனமாகாது. ஆகையால் வர்ணுசிரம விபாகத்தை வகுத்தவேதம் விதித்தவாறு அனுஷ்டித்துவருவதே பகுத்தறிவு படைத்தவர்கழகு அதன்படியே யாவரும் நடந்து நல்ல சுகம்பெறுவாராக.

சுபம்!

பத்திராதிபர்.

# ஆர்ய தர்மம்.

ப்ரஜாபதி-௵ வைகாசி-௴ ௨௮௳

## சிரௌதமே சிறந்தது.

சிரௌத ஸ்மார்த்தங்களை அசட்டைசெய்து இதர மார்க்கங்களைப் புகழ்வோரைத் தண்டிக்கும்படி தர்மராஜா தமது தூதர்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறார். ஸ்வஜாதி தர்மத்தை விடாமலனுஷ்டிப்பவன் உத்தமப்பிராமண ஜன்மத்திற்பிறந்து ஜாதகர்மாதி ஸம்ஸ்காரங்களாலும் உபனயனத்தாலும் வேதமோத அதிகாரம்பெற்று ஸஜாதியான உத்தமரொருவரைக் குருவாக அடைந்து அவரிடம் பணிந்து பணிவிடைசெய்து அவர் மனமொப்பி ஓதிவைக்கும் ஸ்வசாகையை அத்தியயனம்செய்து முற்றிலுமோதமுடியாவிடினும் ஏகதேசத்தையாவது அத்தியயனம் செய்து வேத விருதத்தை முடித்து அனுகூலமான ஸ்வஜாதி குலத்திற்பிறந்த சிறந்தபெண்ணை மணந்து கிருஹஸ்தனாகி வைதிக கர்மங்களை முழுமையும் அனுஷ்டித்து அதற்கு முடியாவிடில் அவசியமாயுள்ளவைகளையாவது இயன்றவரைசெய்து பக்தி மார்க்கத்திலீடுபட்டுப் பரமனைப் பஜித்துப் பரிபாகமடைந்து சன்னியாஸியாகி வேதாந்த விசாரத்தால் ஞான நிஷ்டைபெற்று நின்றால் முக்தியடைவான். இதரமார்க்கங்களாலேற்படும் ஞானம் அக்ஞானமேயாம். அதனாலடையப்படும் மோக்ஷமெனப்படுவதும் பந்தமேயாம். வேதவழிமீறி இஷ்டப்படி நடப்பவர்கள் நரகத்தை நிரப்புகிறார்களாம். கிடைத்தற்கரிய பிராமண ஜன்மத்திற்பிறந்தும் சிலர் நற்கதியடைய விரும்பிக் கெட்டவழியில் பிரவேசிக்கின்றனர். வர்ணாசிரம தர்மத்தைவிட்டு வேறுவழியில் மோக்ஷம் கிடைக்குமென்றுபோவது வெயிலைக்காணக் சக்தியற்றவன் அதன் வேகத்தை அடக்கக் கொழுந்துவிட்டெரியும் தீயில் குதித்ததை ஒத்ததாகும். அவர் கோஷ்டியார் சிலர் வேதத்தை வீண்கட்டுரை என்கிறார், வேதவேள்வி மகாபாபமென்கிறார்,

ஸ்மார்த்த கர்மங்களை இகழ்கின்றார். வேதவேதாங்கங்களைக் கச டறப்பயின்று ஞான சக்திவடிவமாய் அவதரித்து அத்வைத பாஷ்யம் வகுத்தருளிய ஜகத்குரு ஸ்ரீமத் பகவத்பாதாசாரிய மூர்த்திகளையுமிழிவாகப் பேசுகின்றார். ஏகான்மவாதத்தைத் தூஷிக்கின்றார். கொடுமை! கொடுமை!! இவற்றுள் ஒவ்வொன் றுமே நாகமளிக்கப்போர்வதாயிருக்க எல்லாம் பொருந்திய தற்கா லப்புதிய போதகர் நிலைமை பரிதாபத்திற்கிடமாயிருக்கிறது. அத் தீயவழியிற் செல்லாமல் தூயவழியில் நடந்து வர்ணாசிரம தர்மத் தையனுஷ்டித்து க்ஷேமத்தை அடைவார்களாக.

சுபம் !

பத்திராதிபர்

---

# ஸநாதன தர்ம ஸம்ரக்ஷண ஸபை.

(428-வது பக்கத்தொடர்ச்சி)

இக்காலத்திலோவெனில் பிராமணர்கள் வேதங்களையும்சாஸ் திரங்களையும் அலக்ஷ்யம் செய்து வருகிறார்கள். அதனால் வரவர இனி வேதத்தை நேரிற் சொல்லி வைக்கக்கூடிய வேதியனே கிடைக்காமற் போய்விடுவானோ என்றபயம் மேலிடுகிறது. வேதத் தை கற்பதுதான் முக்கியம். அதில்லாமல் வேறு எந்த வியக்கத் தக்க அறிவிருந்தாலும் பயனில்லை. சிஷ்டாசாரம் என்பதொன்று அதொன்று இன்னும் கொஞ்சம் கொஞ்சமிருப்பதால் தான் வேதசாஸ்திரங்கள் தலை காட்டிக்கொண்டிருக்கின்றன.

பிராமணர்கள் எப்போது வேதசாஸ்திரங்களில் சிரத்தை குறைவால் அலக்ஷ்யம் செய்யவாரம்பித்தனரோ அன்று முதல் நமக்கு ஏற்படும் கெடுதல்களுக்குக் கணக்கில்லை. பிராமணன் என்பவனுக்கு பிறந்தவன் முதலில் பெயருக்குமட்டிலும்தான் பிராமணன். உபனயத்திற்குப் பிறகுதான் அவன் உண்மைப் பிராமணனாவான் வேதங்கற்பதனாலும் பிராமணன். இம்மாதிரி தான் க்ஷத்ரியனும் வைசியனும்.

இப்போது நம் எதிரிகள் யாவனொருவனும் வேதாத்யனம் செய்வதுமுதலியகன்மத்தால்பிராமணனாய்விடுவான்என்கின்றனர்

அதல்ல. பிறப்பில் பிராமணபீஜமாயும்பிராமணக்ஷேத்ரமாயுமிருப்பவனுக்குத்தான் கர்மாவும்பிராமண்யத்தைவளர்க்குமென்பதுதான் மெய். ஏனெனில் முன்னமேயே பிராமணத்தன்மை அவனிடத்தில் தான் ஆழ்ந்திப்ரகாசமில்லாமலிருக்குமென்பது மகரிஷிகளின் அபிப்பிராயம். உபநயனம் முதலிய ஸம்ஸ்காரம் பிராம்மண்யத்தை வெளியில் கிளப்புகிறது. ஊசிகாந்தம் என்ற உலோகமானது அத்தகைய சக்திவாய்க்கப்பெற்ற இரும்புத்துண்டைதான் இழுக்குமே தவிர அச்சக்தியை பெறாத தங்கம் வெள்ளி முதலியதை இழுக்காது 40-ஸம்ஸ்காரங்கள் பிராமணசரீரத்திற்கு விதிக்கப் பெற்றிருக்கின்றன. ஆத்மகுணங்களென்று 8ம் பொதுவானவை. ஸம்ஸ்காரமென்றால் பிராமணஜீவன் பெற்ற சரீரத்தை சுத்தம் செய்வது அல்லது அதற்கு உத்தமமான குணத்தை உண்டு பண்ணுவதென்று பொருள். விவாகமென்பது ஓர் முக்கியமான ஸம்ஸ்காரம் விவாகமென்பது ஆண் பெண் பாலர்களின் சுகத்திற்கேற்பட்டதல்ல. தர்மத்தை சரிவர நடத்துவதற்காக ஏற்பட்ட முக்கிய ஸம்ஸ்காரம். பத்னி என்ற சொல் தர்மத்தினாலேயே ஏற்பட்டது. பத்னியோடு சேர்ந்துதான் தர்மம் செய்ய முடியும். தர்மத்தை நடத்துவதற்காக விவாகமென்பது ஓர் குறித்த காலத்தில் தான் செய்யமுடியும். இவ்வபிப்பிராயத்தை ராமாயணத்தில் ஜனகர் ஸீதையை ராமருக்குக் கொடுக்குங்காலத்தில் **सहधर्मचरीतव** உனக்கு தர்மானுஷ்டானத்திற்கு ஒத்திருப்பதற்கு இவளைப் பெற்றுக்கொள் என்றே கூறினர். இந்த ஸம்ஸ்காரம் தான் நம் ஸனாதன தர்மத்திற்கு ஆணிவேர், அதனால் நம் மதம் ஒப்பந்தக் கல்யாணமென்பதைமனுஷ்யஸாமன்யத்திற்குமேவிரும்பவில்லை. விவாகமென்ற ஸம்ஸ்காரம் பிராம்மண்யம் பெறுவதற்கு உபநயனம் என்பது பிராம்மணனுக்கு எவ்விதம்இன்றியமையாத ஸம்ஸ்காரமோ அது போல் ஸ்திரீகளுக்கும் இது அந்த ஸ்தானத்திலேற்பட்டது· விவாகமென்பது இக்காலத்தில் ஸ்திரீபுருஷர்கள் ஒற்றுமையுடன் இவ்வுலகில் வாழ்வதோடு நிற்காமல் பரலோகத்திலும் இனி மறு பிறப்பிலும் இணைபிரியாமல் இருப்பதாகவே என்று நாம் நம்புகிறோம். பத்னி முதலில் இறந்தால் பரலோகத்தில் அவள் தன் கணவனின் வரவை எதிர்பார்த்திருக்கிறாள் என்று நம் சாஸ்திரம் கூறுகின்றது. மொத்தமாய் மனிதனின் பிறப்பே இகசரீர சந்தோஷத்திற்காகவல்ல. பகவா

னின் குணங்களில் ஈடுபட்டு அச்சந்தோஷமடைவது தான் ஜன்மத்தின் பலன் என்பதுதான் நம் சாஸ்திரத்தின் கொள்கை. இல்லாவிடில் இச்சரீரத்தையே சுகசாதனமாகவென்னும் சார்வாக மதஸ்தனே நம் மதம் இகழுநியாயமில்லை.

நம்முடைய ஸ்திரீகளுக்கு நாம் ஸ்வதந்திரம் கொடுக்கவில்லை என்று இக்காலத்திய சிலரின் கூற்று. அதல்ல உலகில் நாம்தான் ஸ்திரீகளுக்கு அழகிய ஸ்வாதந்திரியம்கொடுத்திருக்கிறோம். வீட்டிற்கு அவள் தான் யஜமானி. மனு:-

யத்ரனார்யஸ்துபூஜ்யன்தே ரமன்தே தத்ரதேவதா: ।
யத்ரைதாஸ்து ந பூஜ்யன்தே ஸர்வாஸ்தத்ராफலா: க்ரியா: ॥

ஸ்திரீகள் எந்தக்ரஹத்தில் நன்கு கௌரவிக்கப்படுகிறார்களோ அங்குதான் தேவதைகள் பிரஸன்னமாவார்கள். எங்கு கௌரவிக்கப்படவில்லையோ அங்கு தேவதை ஸான்னித்யமாவதில்லைஎன்பது மட்டுமல்ல. இவன் செய்யும் எந்த தர்மம காரியமும் வீண்தானென்றார். ஆகவே வீட்டில் நாம் அவர்களுக்கு அடிமைதான். ஆனால் அவர்களின் ஸ்வாதந்தரியம் வீட்டுவிஷயத்தில் மட்டும் தான். நாம் வெளியில்போய் ஒருவனிடம்கஷ்டப்பட்டுவேலைசெய்தோ அல்லது வெய்யில் மழை பனி முதலியதைசகித்துக்கொண்டு கஷ்டப்படுகிறதோவ்யவஹாரம் சண்டைமுதலியதில் உழல்வதோ இவையெல்லாம் இவர்கள் சரீர அமைப்புக்கு உதவாதென்ற அபிப்பிராயம் கொண்டே மனு- न स्त्रीस्वातन्त्र्यमर्हति ஸ்திரீக்கு ஸ்வதந்திரம் கிடையாதென்றும் அவ்விஷயத்தில் வகுத்தார். நாம் சபைகூட்டுவதுபோல் அவர்கள் கூடவேண்டிய அவசியமேயில்லை.

இப்போது இங்கு ஸபைகூட்டி நடத்துகிறோம். இனி இன்னும் ஒரு வருடம் கழித்து கூட்டுவதென்றும் அதுவரை தூங்குவது என்பதும் இனி பயன் பெறாது. இனி நாம் அடிக்கட்டி அநேக விடங்களில் சந்திக்கவேண்டும். நாம் பெரு முயற்சியால் ஸநாதன தர்ம நாள் என்று ஒரு நாளைக் குறிப்பிட்டு அதை விசேஷமாய் ஒரே நாளில் நம் பாரத பூமி முழுமையும் கொண்டாட ஒரு வருஷத்திற்கொரு நாள் என்று அதைத் தான் செய்ய வேண்டும் என்றும் அவ்விதம் அனுஷ்டானம் நடக்கும்படி செய்ய நாம்கிராமம் தாலூகா பட்டணம் ராஜதானிதோறும் விடாமுயற்சியால்

ஸபையை ஏற்படுத்தி அவ்விதம் கொண்டாடும்படி ஐகமத்ய புத்தி நமக்குத் தோன்றும் ஊக்கத்தைப்பகவான் உமாபதியோ ரமாபதியோ அருளவேண்டுமென்றுதான் என் அந்தரங்கமானபிரார்த்தனை.

(பெரியோர்களே! மகானுடைய திவ்ய வாக் வர்ஷத்தைநான் என் சிற்றறிவின் அளவினால் அளந்ததுபோல் அக்ராஸனரின் உபன்யாச சுருக்கமென்று பெயரிட்டு முடித்துவிட்டதைப்பற்றி நான் வெட்கிக்கவில்லை. எங்கும் தாரை தாரையாய் அளவிட முடியாத ஜலத்தைக் கொட்டும் மேகத்தின்வர்ஷத்தை அதி அல்பமாய் 2, 3 அங்குல மழை பெய்ததென்பதற்கொப்பாகலாமென்பதே என் துணிபு.) இனி மற்றைய நடவடிக்கைகளை அடுத்து எழுதுகிறேன்.

## அடுத்து சிலதீர்மானங்களைச்செய்தனர் அதுவருமாறு

இம் மகாசபை ஸனாதன ஹிந்து தர்மானுஷ்டானமுள்ள இந்தியாவிலுள்ள ஆஸ்திகர்களால் கோரப்படும் முக்கியமான சில தீர்மானங்களை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டும் என்று இந்தியா கவர்ன்மெண்டாரையும்பிரிட்டிஷ்பார்லிமெண்டையும் ரௌண்டேபிள் கான்பரன்ஸையும் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறது.

1. எங்களுடைய ஸனாதனதர்மமதம் என்பது அனாதியான வேதத்தையும் சாஸ்திரத்தையும் அடிப்படையாய் கொண்டிருக்கிறது. அவ்விதம் நம்பி அனுஷ்டிப்பவர்களுக்குத் தான் பரமாத்ம தர்சனமும் மோக்ஷமும் கிடைக்குமென்பதே எங்களது அனாதியான கொள்கை. இத்தகைய எங்கள் மதத்தை வேறு யாரும் பின்னப்படுத்தவோமாற்றவோ இடமளிக்கக் கூடாதென்றஎங்களது கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமென்பது ஒன்று. அதாவது இத்தகைய எங்களது வேதசாஸ்திர ஸம்பந்தமான மதத்தைப்பற்றி இந்தியா சட்டசபையிலோ மாகாணஸபைகளிலோ தீர்மானம்கொண்டுவரவேகூடாது.

இவ்விஷயத்தை மகா-ள-ஸ்ரீ பி. எஸ். சுந்தரமய்யர் பிஏ.எல்டி அவர்கள் பிரேரிக்கவே உ.வே வி. ஆர். ராஜகோபாலாசாரியர் பிஏ. பிஎல். அவர்களால் அனுவதிக்கப்பெற்று ஸபையோர்களால் ஏகமனதுடன் ஒப்புக்கொள்ளப்பட்டு நிறைவேறியது.

2. எங்கள் மதத்திலேயே சேர்ந்துகொண்டு வெவ்வேறுபெயர்களுடன் ஒரோர் ஸபையைச்சார்ந்தவர்களாய் எங்கள்ஸனாதன வேதசாஸ்திரத்தில் நம்பிக்கைக் குறைவுள்ளவர்களாயும் குறைந்த ஜனத்தொகையுள்ளவர்களாயுமிருப்பவர்கள் ஜனத்தொகையில் அதிகமான எண்ணிக்கையுள்ள ஸனாதனிகளோடு சேர்ந்தவர்களில்லை ஆதலால் எங்கள் மதவிஷயத்தில் அவர்களது வார்த்தை ஏற்கத்தக்கதில்லை. இது சபை அக்ராஸனரால் கொண்டுவரப்பட்டு எல்லோராலும் ஏற்கப்பட்டது.

3. 1929-வது வருஷத்தில் விவாஹவிஷயத்தில் பாஸ் செய்யப்பட்ட சாரதாபில் என்பது எங்கள் மதக்கோட்பாட்டுக்கு மிகவும் பொருந்தாததலால் அச்சட்டத்தை ரத்து செய்யவேண்டும். அல்லது ராஜாபகதூர் கிருஷ்ணமாசாரியாரவர்களால் அது விஷயமாய்க் கொண்டுவரப்படும் விசேஷவிதியையாவது அதிர் சேர்க்க வேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டையும் மெம்பர்களையும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

இது மகா-ள-ஸ்ரீ ராமனுதய்யர் பிஏ.பிஎல். அவர்களால் பிரேரிக்கப்பட்டு ஸ்ரீ-உ-வே.டி.கோதண்டராமய்யங்கார் பிஏ. எம்எல். அவர்களால் அனுவதிக்கப்பெற்று ஸபையோர்களால் ஏகமனதுடன் ஏற்கப்பெற்று நிறைவேறியது.

4. सर्वेषामविरोधेन ब्रह्मकर्मसमारभे யாருக்கும் விரோதம் இல்லாமல் வேதகன்மாவை ஆரம்பிக்கிறேன் என்ற சாஸ்திரப்படி எங்களது கொள்கை யாருக்கும் விரோதமுள்ளதல்ல. எங்கள் மதத்தை அபிமானிக்கின்றவன் எந்த ஜாதியாயினும் எவ்வகுப்பில் சேர்ந்தவனாயினும் அவனுக்கு மனப்பூர்வமான ஸ்வாதந்திரியம் இருக்கவேண்டுமென்பது தான் எங்களுடைய கொள்கை.

இது பிரம்மஸ்ரீ டி.பி. ராமச்சந்திரகோஸ்வாமிகள் பிஏ அவர்களால் பிரேரிக்கப்பெற்று வி. லக்ஷ்மணசாஸ்திரிகள் பிஏஎல்டி., பிஎல் அவர்களால் அனுவதிக்கப்பெற்று ஸபையோர்களின் அனுமதியைப் பெற்றது.

பிறகு மஹாஸ்ரீ பிரம்மஸ்ரீ கணேசசாஸ்திரிகளவர்களால் பிரம்மசர்யத்தின் ஆவச்யகத்தை பற்றியும் பிராம்மண்யத்தின் லக்ஷணத்

தைப்பற்றியும் மந்திரத்தின் மகிமையைப்பற்றியும் விசேஷமாய் ஒரு மணிநேரம் உபன்யசிக்கப்பட்டது.

அடுத்து எம். என். சுப்ரமண்யசாஸ்திரிகளால்தற்காலம் ஸம்ஸ்கிருத பாஷையை கற்கவேண்டிய அவச்யகத்தையும் உபனயனம் அவசியம். 9-வயதிற்குள்ளாவது செய்துவிடவேண்டும். அதன் பிறகு சுமார் 2-வருடமாவது உபயுக்தமான வேதபாகங்களின் அத்யயனத்தைச் செய்யவேண்டியதையும் ஒவ்வொரு கிராமத்திலும் அவசியம் ஓர் சாஸ்திரம் கற்றபண்டிதரும் கனபாடிகளும் இருக்கவேண்டுமென்று செய்வதையும் அவர்கள் ஸம்ரக்ஷணையை அந்தந்த கிராமத்தாரே செய்துகொள்ள வேண்டு மென்பதையும் பற்றி ஒரு மணிநேரம் உபன்யசிக்கப் பெற்ற பிறகு இதை ஒட்டி அடியிற்கண்ட தீர்மானம் படிக்கப்பட்டது.

இம்மகாநாடு கீழ்கண்டவைகளில் பிராமணர்கள் விசேஷ கவனம் செலுத்த முற்படவேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறது.

5-1. ஸம்ஸ்கிருத பாஷையை தங்கள் குழந்தைகளுக்குக் கற்பித்தல். 2-7. அல்லது 8.வயதில் அவசியம் உபனயனம் செய்தல், 3. உபனயனத்திற்குப் பிறகு குறைந்தபக்ஷம் இரண்டு வருஷம் வேதாத்யயனம் செய்வித்தல், 4. பிர்மோபதேசம் முக்கியமான வேதமந்திரங்கள் இவைகளின் தத்துவங்களை போதித்தல், 5. ஒவ்வொரு கிராமத்திலும் கிராமஸங்கம் ஏற்படுத்தி ஒரு ஸம்ஸ்கிருத பண்டிதர் ஒரு வேதாத்தியாபகர் இவர்களை போஷித்து ஸம்ஸ்கிருதவித்யாப்யாஸத்தை உத்தாரணம் செய்தல் 6. நமக்கென்று தனியாக ஓர் தினசரி பத்திரிகை ஆரம்பித்தல்.

இது பிர்மஸ்ரீ மரூர் கணேச சாஸ்திரிகளவர்களால் பிரேரிக்கப்பெற்று M. N. சுப்பிரமணிய சாஸ்திரிகளாலேயே அனுவதிக்கப்பெற்று ஸபையோர்களால் ஏகமனதுடன் அங்கீகரிக்கப் பெற்றது.

பிறகு வெகுகாலமாய் ஸனாதனதர்மப்படி பூஜை முதலியன நடத்தப்பட்டுவரும் பாடல்பெற்ற அல்லது அதிபிராசீனமான கோயில்களிலோ தீர்த்தங்களிலோ சாஸ்திரப்படி பிரவேசிக்க அனுவதிக்கப்பெற்ற ஜாதி ஹிந்துக்களைத்தவிர மற்ற தடுக்கப்

பட்ட ஹிந்துக்கள் அவைகளிற் பிரவேசிப்பது நியாயமில்லை என்பதைப்பற்றி சாஸ்திரப்பிரமாண வசனங்களுடன் ஒருமணிநேரம் தில்லயம்பூர் உ-வே சக்கிரவர்த்தி ஆசார்யஸ்வாமிகளால் உபன்யஸிக்கப்பெற்றபிறகு இதை ஒட்டிய தீர்மானம் வருமாறு:—

6. ஸனாதனிகளின் கோயில், தீர்த்தங்களில் தடுக்கப்பட்ட வகுப்புகளை பிரவேசிக்கச்செய்யும் முயற்சிகளால் ஸனாதனிகளை கலங்கச் செய்வதைத்தவிற வேறு உருவான பிரயோஜனம் யாதொன்றும் இல்லாமையால் சாஸ்திரங்களாலனுமதிக்கப்பட்டவர்களே அவைகளிற் பிரவேசிக்கலாம். எதிரான ஆர்பாடங்கள் விலக்கப்படவேண்டும். இது ஸம்பந்தமாக சாஸ்திரங்களுக்கு விரோதமாக சட்டஸபைகளிற் செய்யப்படும் முயற்சிகளை இம்மகாநாடு ஆக்ஷேபிப்பதுடன் அதை அழுத்தமாகவும் கண்டிக்கிறது.

இத்தீர்மானத்தை உபந்யாஸகரே பிரேரிக்க பிர்மஸ்ரீ தியாகராஜசாஸ்திரிகளவர்களின் அனுவாதத்துடன் ஸபையோர்களால் ஏகமனதுடன் அங்கீகரிக்கப்பெற்றது.

7. அரசாங்கம் மதவிஷயத்தில் நடுநிலைமைவகித்தல், அவரவர்கள் மதத்தை அவரவர்கள் அனுஷ்டிக்கும் விஷயத்தில் சுதந்திரம், மைனாரிடி ஸமூகங்களின் பழக்க வழக்கங்களில் யாரும் எதிராய் தலையிடாதிருத்தல் என்று இத்தகைய மூலாதாரமான உரிமைகளை வெளியிட்டச்சென்ற காரச்சி காங்கிரஸ்ஸின் அறிக்கையை இம்மகாநாடு அன்புடன் வரவேற்கின்றது. என்ற இவ் விஷயத்தை மகா-ா-ஸ்ரீ கும்பகோணம் வக்கீல் S மகாலிங்கய்யர் (B A.,B L.) அவர்கள் பிரேரிக்க உ-வே T. கோதண்டராம அய்யங்கார் அவர்களால் அனுவதிக்கப்பெற்று ஸபையோர்களின் ஒருமையான அபிப்பிராயத்துடன் இனிது நிறைவேறியது.

8. இதை ஒட்டியே அமெரிக்கா பிராஸ்கேஸ்டிங்கார்ப்போரேஷனுக்கு காந்தி அவர்கள் பேட்டிகொடுத்தபோது புதிய ஸ்வராஜ்யத்தில் தீண்டாமை விவாகச் சட்டம் இவ்விஷயத்தில் தாங்கள் என்னமாதிரிநடத்த உத்தேசம் என்று கேட்டார்கள் அதற்கு காந்தி அவர்கள் இந்தக்ஷணமே தீண்டாமையை விலக்க வேண்டும். விவாக சட்டத்தைச் சரிவர அனுஷ்டானத்திற்குக்

கொண்டுவந்துவிடவேண்டுமென்றும் எங்களால் விரும்பப்படும் ஸ்வராஜ்யம் வருகிறவரையில் இது விஷயத்தை தாமதம்செய்ய என்மனம் சகிக்கவில்லை என்றும் சொன்னார்கள். அவ்விதம் புதிய ஸ்வராஜ்ய கவர்மெண்டில் பிடிவாதம்செய்து வைதிக ஸனாதனிகளையும் மைனாரிடிகளையும் பலவந்தப்படுத்தலாமென்று அவர் அபிப்பிராயம் நன்கு வெளிப்பட்டால் அத்தகைய அவரது அபிப்பிராயத்திலிருந்து இம்மகாநாடு விலகிக்கொள்வதுடன் எங்களது ஆழ்ந்தவருத்தத்தையும் ஆக்ஷேபத்தையும் இம்மகாநாடு தெரிவித்துக் கொள்கிறது.

இவ்விஷயத்தையும் முன் இருவர்களே முறையே பிரேரணையையும் ஆமோதனத்தையும் செய்ததுடன் காந்தி அவர்கள் அவ்விதம் சொன்னதற்கு மிகுந்த வருத்தத்தை தெரிவித்துக் கொண்டும் நிறைவேறியது.

பிறகு தாழ்ந்த வகுப்பார்களென்று அழைக்கப்படுவதின் தத்துவத்தைப்பற்றி சாஸ்திராபிப்பிராயத்தை வெளியிடும்படி கேட்டுக்கொண்ட ஸபையோர்களின் அபிப்பிராயத்திற்கிணங்கி ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபர்களின் ஸ்ரீமடம் ஆஸ்தான வித்வானும் ஆர்யதர்மம் பத்திராதிபருமான பாஷ்யபாவக்ஞ பிர்மஸ்ரீ V. S. வெங்கடராம சாஸ்திரிகளவர்கள் ஜாதியில் ஒருவன்மேல் இன்னொருவன் கீழ் என்று மேன்மையாயும் இழிவாயும் கூறப்படவே இல்லை. எல்லோரும் பகவானின் விசுவாஸத்திற்கும் அனுக்கிரகத்திற்கும் ஸமபாகஸ்தர்கள். ஆனால் எல்லோரும் முன்பின்னாய்தான் பிறந்திருக்கவேண்டும். அப்படியேதான் உலகில் தாய் தந்தையர்களுக்குப்பல பிள்ளைகள் உண்டென்றால் எல்லோரும் ஏககாலத்தில் இல்லாமல் வெவ்வேறு காலத்தில்தான் பிறப்பதைக்கண்டிருக்கிறோம். அதை ஒட்டி அண்ணன் தம்பி என்ற வியவகாரம் செய்கிறோம். அதுபோல் உலகில் நாமும் ஐந்து ஸகோதரர்கள்தான். அவரவர்கள் தனித்தனி வேலை மூத்தவனால் அல்லது தந்தைதாயாற் குறிப்பிட்டபடி வேலை செய்துவந்தால் குடும்பம் ஒற்றுமைப்பட்டு வாழ்வதுபோல் இப்பாரதபூமி என்ற பகவானின் கிரகம் நன்றாய் இருக்க அண்ணன் தம்பி வேற்றுமையும் அதற்குத்தகுந்த மரியாதையும் அவசியம் இருக்கவேண்டும். உலகில் யாதும் வித்தியாஸமில்லாமல் சிருஷ்

டிக்கப்படவே இல்லை. வித்தியாஸமில்லையென்றால் பிரபஞ்சமே யில்லை. மனிதனை நாம் யோசித்துப்பார்த்தால் நம் சரீரத்திலேயே இந்த தத்துவத்தை அறியலாம். நான் என்பது உச்சி முதல் உள்ளங்கால்வரை உள்ள எண்சாண் உடம்பையே கூறிக்கொள்கிறோம். இதிலிருக்கும் அங்கங்களையும் நம் கையிலுள்ள வித்தியாஸமான 5-விரல்களையும் கவனிக்கலாமென்று விஸ்தாரமாய் ஒருமணிநேரம் உபந்யஸித்தார்கள். பிறகு இதை ஒட்டி அடியில்கண்ட தீர்மானத்தைப் படித்தார்கள்.

9. தாழ்ந்தவகுப்பார் எனச் சொல்லப்படுவோரிடம் ஹிந்து மதம் சௌசம் ஆசாரம் காரணமாகவும் தான் தன் ஸந்ததிஇவைகளின்க்ஷேமத்தை உத்தேசித்தும் போதிக்கப்படும்விதிகளை பிறர் தவாரகக் கிரகித்துக்கொண்டதோடல்லாமல் த்வேஷம் மூட்டி வருவதையும் உத்தேசித்து இம்மகாநாடு வருந்துகிறது. மற்ற வகுப்பார்களிடத்தில்த்வேஷத்தாலோ அல்லது வேறு காரணத்தாலோ இது ஏற்பட்டதல்ல என்று தெரிவித்துக்கொள்ளுகிறது. எனவே தாழ்த்தப்பட்டவர்களென கருதப்படுவோர்களுக்குசௌகர்யங்கள் வேண்டியிருக்குமானல் அதற்காக ஏற்பட்ட கமிட்டிகள் தனியான கோவில்கள் கிணறுகள் படிப்பு வசதிகள் இவைகளை அளிக்கமுற்படலாம்.

இதை தில்லையம்பூரில் உ. வே. சக்ரவர்த்தி ஆசார்யஸ்வாமி பிரேரிக்க பிரம்ஸ்ரீ முத்துஸ்வாமி அய்யர் அவர்களால் அனுவதிக்கப் பெற்று ஸபையோர்களின் சம்மதியைப் பெற்றது.

10. மைனாரிடிகளாயும் மதம் சமூகம் இவைகளுக்கு மிக முறண்படுவார்களாயும் மேல் நாட்டு நாகரீகத்தால் மதக்கட்டளையை மீறியவர்களாயும் உள்ள சில இந்திய ஸதிரீகளால் ஸ்திரீகள் மகாநாடொன்று கூட்டி அதில் சகல இந்திய ஸ்திரீகளது அபிப்பிராயமெனத் தோன்றும்படி வெளியிடும் அபிப்பிராயங்கள் இந்தியர்களின் வாழ்க்கைக்கு மிக பங்கம் விளைவிப்பதாய் இருக்கிறது ஆகையால் ஜனங்களும் கவர்ன்மெண்டாரும் இத்தகைய தனிப்பட்டவர்களின் அபிப்பிராயங்களைக் கண்டு தவறான வழியில் செல்லாதிருக்க வேண்டுமென்று இம்மகாநாடு எச்சரிக்கை செய்கிறது.

இவ்விஷயத்தை S. மகாலிங்கய்யர் பிரேரிக்க T. S. சுப்பய்யர் (B.A.,B.L.) அவர்களால் அனுவதிக்கப்பட்டு ஸபையோர்களின் அபிப்பிராயத்தை எதிர்பார்த்தபோது மகா-ள-ஸ்ரீ ராதாகிருஷ்ணய்யர் (B.A.,B.L) அவர்களால் ஸ்திரீகளின் வார்ஸ்பாத்தியம் முதலிய சில விஷயங்களில் அவர்கள் செய்துகொள்ளும் தீர்மானங்களுக்கு இந்த தீர்மானம் பாதகமானதால் ஸ்திரீகள் மகாநாடென்பதே கூடாதென்பதை இதிலிருந்து மாற்றவேண்டுமென்று ஆக்ஷேபித்தார்கள். ஸ்திரீகளுக்குத்தன் கணவன் மூலம்தன் கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ளலாமே தவிர உலகத்திற்குப் பொதுவான சாதகங்களென்று மயக்கம்கொண்டு வெளியில் அவர்கள் சேர்வதும் ஸபை கூட்டுவதும் பேசுவதும் அவர்கள் படிப்பதும் நம் இந்திய ஸ்திரீகளது தர்மமே அல்ல. அதனால் அவர்கள் கெடுவார்களென்று பல பண்டிதர்களால் சொல்லப்பட்டும் அய்யாவர்கட்கு ஸமாதான மேற்படாததால் ஸபையின் தீர்மானத்தை ஆமோதனம் செய்பவர்களைக் கைதூக்கக்கேட்டுக்கொண்டதில் மகா-ள-ஸ்ரீ ராதாகிருஷ்ணய்யாவர்களுடன் இன்னும் மூவர்தவிர மற்றயாவரும் கைதூக்கியதால் நால்வரைத்தவிறப் பெரும்பாலோரின் அனுமதியால் தீர்மானம் நிறைவேறியது.

11. பிறகு பால்ய விவாகம்தான் சாஸ்திரீயம் அதுதான் ரோகமில்லாமைக்கும் நல்ல ஸந்தானத்திற்கும் ஆயுளுக்கும் தர்மானுஷ்டானத்திற்கும் இன்றியமையாததென்று ஒருமணிநேரம் திருவாதி ஸம்ஸ்கிருத காலேஜ் வியாகரண பண்டிதர் பிமஸ்ரீ மஹூர் வைத்தியநாத சாஸ்திரிகளால் உபன்யஸிக்கப்பட்டதும் இவ்விதம் பால்யவிவாகத்தைத் தடுக்கும் சட்டம் எங்கள் மதத்திற்கே விரோதமானதால் அவ்விஷயத்தில் தற்காலம் செய்யப்படும் சட்டம் மதவிரோதமானதென்ற தீர்மானம் ஷை சாஸ்திரிகளவர்களால் பிரேரிக்கப்பெற்று மகா-ள-ஸ்ரீ R. ராமசேஷய்யர் (B.A.,B.L.) அவர்களால் அனுவதிக்கப்பெற்று ஸபையோர்களின் அங்கீகாரத்தைப்பெற்று நிறைவேறியது.

பிறகு பிராமண ஜாதியிலேயே உள்ள உட்பிரிவுகளில் ஒருவருக்கொருவர் விவாகம் செய்துகொள்வது கூடாது. அவரவர்களின் நடவடிக்கை கொள்கைமுதலியவை மிக வித்தியாஸமுள்

ளனவென்ற விஷயத்தைப்பற்றி உள்ளூர் ஸரஸ்வதீ மஹால் ஸம்ஸ்கிருத பண்டிதர் N. வைத்தியநாத சாஸ்திரிகளால் ஒருமணிநேரம் உபன்யஸிக்கப்பட்டபிறகு அடியிற்கண்ட தீர்மானம் படிக்கப்பெற்றது.

12. பலஜாதிப்பிரிவுகளுக்குள்ளும் விவாகம் செய்துகொள்ளல் சாஸ்திரம் ஜாதிவழக்கத்திற்கும் விரோதமாகையாலும் அது பிராமண ஸமூகத்தையே கெடுத்துவிடுமாகையாலும் சட்டஸபைகளில் முயற்சிக்கப்படும் இவ்விஷயங்களை இம்மகாநாடு ஆக்ஷேபிக்கிறது. இவ்விஷயத்தை ஷை சாஸ்திரிகளவர்கள் பிரேரிக்க உ-வே A. நாராயண அய்யங்கார் (B.B ,A.L) அவர்களின் அநுவாதத்தை ஒட்டி ஸபையோரின் அங்கீகாரம்பெற்று நிறைவேறியது. பிறகு வரசுல்க விஷயத்தைப்பற்றி சாஸ்திரதிலகம் திருவையார் பிர்மஸ்ரீ B, விசுவநாதசாஸ்திரிகளவர்கள் சாஸ்திரத்திற்கு அது பரமவிரோதமென்றும் சாஸ்திரத்திற் கூறப்பெற்ற 8-விவகாரங்களுள் அது ஆஸுரவிவாகமெனப்படுமென்றும் அது மிக நிஷித்தமென்றும் புத்திர விக்கிரயமென்றும் அதனால் பல குடும்பங்கள் அழிகிறதென்றும் அது கல்யாணமாய் நடக்காமல் அதற்கு விபரீதமாய் நடக்கிறதென்றும் இவ்விதம் நாம் கவனக்குறைவால் நடத்தும் காரியத்திற்கு சாஸ்திரம்பழிக்கத்தக்கதல்லவென்றும் வைதிகரீதியிலும லௌகிகரீதியிலும் மிகத்தெளிவாய் ஸபையோர்களின் மனதில் பதியும்படி ஒருமணிநேரம் உபன்யஸித்தார்கள். பிறகு இதை ஒட்டி.

13. வரசுல்கம் வாங்குவதோ கொடுப்பதோ கூடாதென்றும் பிராமணர்கள் வரசுல்கத்துடன் நடைபெறும் விவாகங்களில் கலந்துக்கொள்ளக்கூடாதென்றும் கூடியவரையில் செலவுகளை வீணாய்ப்போகாமற் குறைத்துக்கொள்ளவேண்டுமென்றும் இம்மகாநாடு தெரிவித்துக்கொள்கிறதென்ற தீர்மானத்தை அக்கிராஸனர்படிக்க ஸபையோர்களால் ஏற்கப்பட்டு நிறைவேறியது. பிறகு பிராமணர்கள் தற்காலத்தில் விருத்தியில்லாமல் கஷ்டப்படுவது சரியல்ல நம் சாஸ்திரத்தில் பிராமணனுக்கு வியாபாரம் வியவசாயம் முதலிய தொழில்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே அவ்வழியைப்பின்பற்ற ஆரம்பித்தாற் குறைவே இல்லை.

ஸேவாவிருத்தி என்பது நாய் விருத்தி என்று நம் சாஸ்திரங்களால் நிந்திக்கப்படுகிறதென்ற விஷயமாய் ஒருமணிநேரம் தில்லயம்பூர் உ-வே வெங்கடாசார்யஸ்வாமிகள் உபன்யாஸத்தைஒட்டி

14. பிராமணர்கள் சவவிருத்தி என்று கண்டிக்கப்படும் அடிமை வாழ்க்கையை விட்டு புராதன முறைகளையோ வியாபாரம் அல்லது வியவசாயத்தையோ அல்லது வேறு சுயேச்சையான தொழில்களையோ மேற்கொள்ள வேண்டுமென்ற தீர்மானத்தை ஷை ஆசார்யர்கள் பிரேரிக்க மகா-ா-ஸ்ரீ S. காசிராம பாண்டியா அவர்களின் அனுவாதத்துடன் சபையோரின் சம்மதி பெற்று நிறைவேறியது.

15. பிறகு விவாகத்தை முதல்நாள் மாங்கல்யதாரணம் ஹோமம் முடியப்பெண் ஜாகையிலும் பிறகுசாயங்காலம் பிரவேச ஹோமம்முதல் பாக்கி 3நாட்களின் கன்மாவைப் பிள்ளைஜாகையிலும் நடத்தும்படிதான் சாஸ்திரம் கூறியிருப்பதால் இவ்வனுஷ்டானத்தைக் கைக்கொண்டால் பெண்வீட்டுக்கான் செலவு குறையும் சாஸ்திரோக்தமாயும் செட்டாயும் ஆகுமென்ற விஷயத்தை அக்கிராஸனர் விஸ்தரித்துக் கூறியதை ஸபையோர்கள் ஏகமனதுடன் குதூகலமாய் அங்கீகரித்தனர்.

இத்தீர்மானம் முடிந்ததும் உ-வே கோதண்டராமயய்யங்காரவர்கள் ஸபை இத்துடன் முடிவடைகிறதென்றும் அக்கிராஸனம் வகித்து நம்மை அனுக்கிரகித்த இந்த மகா ரத்தினத்திற்கு நாம் செய்யும் கைம்மாறு யாதென்று விளங்கவில்லையென்றும் ஆயினும் நம்மனப்பூர்வமான வந்தனத்தையே செலுத்துவோமென்று ஸபையோர்களின் அனுமதியோடு பூமாலே சூட்டினர். பிறகு இச்சபையை ஒட்டி நடந்துவரும் ஆர்யமத பாடசாலையின் வருடாந்தரக்கொண்டாட்டம் துவக்கப்பட்டது. அதுவருமாறு:—

M. N. சுப்பிரமணியசாஸ்திரி

---

# ஆர்யதர்மபாடசாலா, தஞ்சாவூர் வருஷபூர்த்திக் கொண்டாட்டம்.

10—5—31.

மாலை 5-மணிக்கு பிராமணமகாநாடு முடிந்தவுடன் தஞ்சை ஜில்லாபோர்டு பிரஸிடெண்ட் ப்ரம்மஸ்ரீ S. சுப்ரமண்ய அய்யர் அவர்களின் அக்கிராஸனத்தின்கீழ் ஆர்யமதபாடசாலையின் வருஷ பூர்த்தி கொண்டாட்டம் நடைபெற்றது.

பாடசாலைக் குழந்தைகளால் ராகவாஷ்டகம் பாடப்பட்டு ஸம்ஸ்கிருத ஸ்தோத்திரங்களுடன் நடவடிக்கைகள் ஆரம்பமாயின. அடுத்தாற்போல் சூர்ய நமஸ்காரமெனும் தேகாப்பியாஸ முறை நடைபெற்றது. ப்ரம்மசாரி வகுப்பு மாணவர்களால் வேதபாராயணம் நடைபெற்றபிறகு பாடசாலையின் காரியதரிசியும் மானேஜருமாகிய G. V. லெக்ஷ்மண சாஸ்திரிகள் பாடசாலையின் வேலைகளைப்பற்றிய ரிபோர்டைப்படித்தார். பிறகு III-வது பாரம்வரையில் கிளாஸ்களை நடத்தவும் பிறர்கையை எதிர்பாராமலிருக்கவும் வேண்டிய பண்டுகளுக்குஉதவிபுரிய வேண்டுமென்று விக்ஞாபனம் செய்துகொண்டார்.

பிறகு அக்கிராஸனர் பாடசாலைக் குழந்தைகளுக்கு பரிசுகளை வழங்கினர். பாடசாலை கமிட்டியையும் தஞ்சை பொது மக்களையும் பாராட்டிவிட்டு இப்பாடசாலை இதர கலாசாலைகளுக்கும் உதாஹரணமாக இருக்குமெனதான் நம்புவதாக தெரிவித்தார்கள்.

பழவர்க்கங்கள் கொடுக்கப்பட்டபிறகு அக்கிராஸனருக்கு வஸ்த்ரோபசாரங்கள் செய்யப்பட்டன. பிறகு உ-வே கோதண்டராமய்யங்காரவர்களால் ஸபை நடவடிக்கையை இரண்டு தினங்களாய் வந்து கவனித்த ஆஸ்திகமகாஜனங்களுக்கும் இம்மகாஸபை நடக்கும்படி இடம்கொடுத்த ஸகாநாயகரின் ஸந்ததிக்கும் பரம்பரையாய் தர்மத்திலேயே ஈடுபட்டிருப்பதுமேல்மேன்மேலும் அந்த ஸந்ததி வளர்ந்து வர வேண்டுமென்றும் பிரார்த்தனையும் செய்யப்பட்டபிறகு பாடசாலைப் பெண்குழந்தைகள் கோலாட்டம் விளையாட பாண்டுவாத்தியத்துடன் நான்கு வீதிகளிலும் ஊர்வலமாக வந்தபிறகு வருஷபூர்த்திக்கொண்டாட்டம் இனிது முடிவுபெற்றது.

காரியதரிசி & மானேஜர்.

# பிராம்மண்யம்.

तपसा वा सुमहता कर्मणा वा श्रुतेन वा ।
ब्राह्मण्यमथ चेदिच्छेत्तन्मे ब्रूहि पितामह ॥
क्षत्रियो यदि वा वैश्यश्शूद्रो वा राजसत्तम ।
ब्राह्मण्यं प्राप्नुयाद्येन तन्मे व्याख्यातुमर्हसि ॥

இந்த வியாஸாசாரியாளின் வாக்கியத்தைச் சற்று ஆலோசித்துப்பார்த்தால் பிராம்மண்யத்தை அடைவது மிகக் கஷ்டமென்பதோடு பிரம்மதேவரால் பிரிக்கப்பட்டு அனாதி காலமாக வழங்கிக்கொண்டுவரும் ஜாதியில் நின்றும் பிறந்து அந்த ஜாதிக்காகவென்றே விதிக்கப்பட்ட கருமங்களை அனுஷ்டித்துக்கொண்டு ஜாதிக்குக்குறைவை ஏற்படுத்திக்கொள்ளாமல் காப்பாற்றிக்கொள்பவனுக்குத்தான் பிராம்மண்யம் நிலைக்குமென்று அபிப்பிராயப்படுவதாக காண்கிறது. பிராமண்யமென்பது என்னவென்று இங்கு விசாரிக்கவேண்டும். விராட்புருஷரான பிரும்மதேவருடைய முகத்தின் தேஜஸ் இருக்கும் இடம் என்று கூறுவது அதற்கு உண்மையான அர்த்தமாக ஏற்படுகிறது. பிரம்மதேவருடைய எவ்வெந்த அங்கத்திலிருந்து எவ்வெந்தமனிதன் ஸிருஷ்டிக்கப்பட்டானோ அவ்வந்த அங்கத்தின் தேஜஸ் (சக்தியுள்ளவனாயிருக்கிறான் என்றே ஒப்புக்கொள்ளவேண்டியது அவசியம். இப்படிச் சொல்வதினால் குறைவு ஏற்பட்டதாக நினைக்கமுடியாது. இதற்கொரு திருஷ்டாந்தம். நமக்கும் முகம், கை, துடை, கால் என்ற அங்கங்களிருக்கின்றன. முகத்தினால் பேசுகிறோம். கைகளினால் வேலை செய்கிறோம். துடைகளினால் உட்காருகிறோம் கால்களினால் நடக்கின்றோம். இத்தகைய காரியங்களில் முகத்தினாலும் கைகளினாலும் நடக்கவும்முடியாது. காலினாலோ துடையினாலோ கையினாலோ பேசவும் முடியாது. என்கிற மாதிரியாக அவ்வந்த அங்கங்களுக்குரிய காரியங்கள் அவ்வந்த அங்கங்களே தான் நடத்திக்கொள்ளுகிறதை நாம் பார்க்கிறோம். இதுபோல் அவ்வந்த வர்ணங்களுக்கென்றே விதிக்கப்பட்ட கருமங்களை அந்த இனத்தார்களே செய்வது நியாயமாக இருக்கிறது. இப்படியிருக்கும் பொழுது பிரம்மதேவருடைய அந்தந்த அங்கத்தின்

தேஜஸ் சக்தியானது அவரிடமிருந்து நம்முடைய மூத்தோர்கள் தோன்றியநாளாக பரம்பரையாக நமக்கும் வந்திருக்கிறதென்று ஊஹிப்பதுரொம்பவும் சரியாகஇருக்கிறது. ஆகையால் உலகத்தில் பெரும்பாலும் தகப்பனைப்போலவே பிள்ளையும் பிறந்திருக்கிறானென்றுசொல்வதேவழக்கத்தில் வந்திருப்பதைநாமறிந்திருக்கிறோம். க்ஷத்திரியனிடத்தில் பிதாவுக்கு ஒப்பான பாகுபலமுள்ளவனென்றும்வைசியனிடத்தில் பிதாவுக்கொப்பான துடைகளின்பலமுள்ளவனென்றும்சூத்திரனிடத்தில்பிதாவுக்கொப்பானநடைப்பழக்கமுள்ளகால் பலமுள்ளவனென்றுமுலகரீதியாகவழங்குவதையும்கண்டிருக்கிறோம்சுருதிஸ்மிருதிகளைபிரமாணமாகக்கொண்டு ஆஸ்திகர்களானநாம் அந்த பிரம்மதேவருடையமுகசக்தியைபரம்பரையாக அடைந்திருக்கிறோமென்பதில் சந்தேகமில்லை இதையேபிராமண்யமென்றுகருதவேண்டும். ஜபம்தபம்அத்யயனம்கருமானுஷடானம் முதலியவைகள் பிராம்மண்யத்தை அடைவதற்கு சாதனமாகாது. பிராம்மண்யத்தை காப்பாற்றிக்கொள்வதற்குமாத்திரம் சாதனமாகின்றன. இப்படிப்பட்ட பிராம்மண்யத்தைரக்ஷித்துக்கொள்வது மிக அவசியம். ஏனென்றால் பீஜத்திலாவது க்ஷேத்திரத்திலாவது தோஷங்களேற்பட்டிருந்தாலும் பிராம்மண்யத்திற்கு குறைவு ஏற்படுகிறது இதுபோல் கர்ப்பாதானம் முதலான ஸம்ஸ்காரங்கள் விதிக்கப்பட்ட காலத்தில் நடக்காவிட்டாலும் ஸம்ஸ்காரங்களைச் செய்யாமல் விட்டுவிட்டாலும் ஷி பிராம்மண்யத்திற்கு குறைவு உண்டாகிறது. பிரம்மசாரி கிருஹஸ்தன் வானப்ரஸ்தன்பிக்ஷு என்பதாக விதிக்கப்பட்ட ஆச்ரமங்களை அடைந்து அந்த ஆச்ரமத்திற்காக விதிக்கப்பட்ட கருமங்களை அசிரத்தையினாலோ, மதத்தினாலோ நாஸ்திகத்தினாலோ சரியாக அனுஷ்டானம் செய்யாமல் போனாலும் விட்டுவிட்டாலும் பிராமண்யம் குறைந்துவிடுகிறது. இம்மாதிரியே இன்னும் பலவிதமான தோஷங்கள் பிராமண்யத்துக்குக் குறைவுண்டாகும்படி செய்யக் கூடியவைகள் உண்டு. இந்த பிராமண்யத்தின் குறைவே பதனமென்று சொல்லப்படுகிறது. இதற்கு ஒரு திருஷ்டாந்தம் சொல்லலாம். அதாவது இரத்தின ஜாதியில் சேர்ந்த மாணிக்கம் என்று ஒரு ரத்தினமிருக்கிறது. அது ஒரு மலையிலிருந்து தேடி எடுக்கப்படுகிறது. அது ஒரே பாரையாகயிருக்கும். அதை எடுத்துவந்து துணுக்குகளாகச் செதுக்கினால் அந்த காலத்திலும் பார்வைக்குக் கல்லா

கத் தோன்றும். அதை சாணையில் தீட்டினால் நீரோட்டம் முத லிய இரத்தின குணங்கள் உண்டாகின்றன அதையும் தங்கத்தில் வைத்துக் கட்டினால் இன்னும் அதிக குணமும் மதிப்புமுண்டா கிறது. இதுபோல் ஸம்ஸ்காரம் எவ்வளவு ஏற்படுகிறதோ அதற் குத்தகுந்த குணமும் விருத்தியடைகிறது. இப்படி செய்ய வேண்டிய ஸம்ஸ்காரங்களில் சாணையில் தீட்டாமலும் தங்கத்தி னால் கட்டாமலும் இரும்பினாலோ ஸீஸத்தினாலோ கட்டினாலும் அதன் குணம் பிரகாசிக்காது. இந்த விடத்தில் இரத்தின காந் தியின் குறைவென்று மாத்திரம் சொல்லப்படுமே தவிற மாணிக் கமேயில்லையென்று சொல்ல முடியாது. இதுபோல் பிராமண்ய குறைவென்பதினால் பிராமண்யம் அழிந்துவிட்டதாக நினைக்க முடியாது. உலகத்திலும் நிஷித்தகாரியங்களைச் செய்துகொண் டிருப்பவனைப்பார்த்து பிராம்மணனாகயிருந்து அன்யாயமாய் கெட்டுப்போய்விட்டான் என்று சொல்லுகிறார்கள். சேரு புழுதி எண்ணை முதலியவைகளால் பூசப்பட்ட மாணிக்கத்தைப் பார்த்து பெரியவிலைமதிக்கக் கூடிய இரத்தினம் பிரகாசக் குறை வினால் அது கெட்டுப்போய் விட்டதாக கூறுவதுபோல் பிராம் மண்யமென்பதை நினைக்கவேண்டும். இப்படிக் குறைந்து போனதை விருத்திசெய்துகொள்ள வேண்டுமானால் பிராயச்சித் தம் என்ற கர்மாவைச்செய்துகொண்டு பிறகுதான் செய்யவேண் டிய கருமங்களை தவாமல் அனுஷ்டித்து வந்தால் விருத்தியடையு மென்பதில் சந்தேகமில்லை. ஆனால் குறைந்த பிராமண்யத்தை விருத்திசெய்துகொள்வதென்பது உடனே ஏற்படுவதுமுண்டு. பத்து இருபது என்று வருஷக்கணக்கினால் ஏற்படுவதுமுண்டு. ஜன்மாந்திரங்களில் ஏற்படுவதுமுண்டு. பதனதோஷம் கொஞ்ச மாயிருப்பதும் அதிகமாயிருப்பதுமே காரணமென்று கருதவேண் டும். ஆகையால் பதனம் ஏற்படாமல் பிராம்மண்யத்தை ரக்ஷித்து வரவேண்டும். க்ஷத்திரிய வைசியாதிகள் இதை அடையவிரும் பினால் ஸ்வதர்மத்தைத் தவாமல் அனுஷ்டித்தால் ஜன்மாந்திரத் தில் அடையமுடியும். இப்பொழுது அடைந்திருக்கும் ஜன்மத் திலேயே தபம்முதலிய சாதனங்களால் அடைந்துவிடலாமென்று நினைப்பதும் சரியல்ல. இது விஷயமாக பீஜக்ஷேத்திர தோஷத் தினால் பிறந்த ஒரு மதங்கரென்பவரின் சரித்திரத்தை திருஷ்டாந்த மாக எழுதுகிறேன்.

ब्राह्मण्यन्तात दुष्प्रापं वर्णैः क्षत्रादिभिस्त्रिभिः ।
परं हि सर्वभूतानां स्थानमेतद्युधिष्ठिर ॥
बह्वीस्तु संसरन्योनीर्जायमानः पुनः पुनः ।
पर्याये तात कस्मिंश्चिद्ब्राह्मणो नाम जायते ॥

பீஷ்மர் தர்மபுத்திரருக்குக் கூறுகிறார். க்ஷத்திரியன் முதலான மூன்று வர்ணத்தினர்கள் பிராம்மண்யத்தை அடைவது மெத்த கடினம். ஏனென்றால் பிராமண்யமென்பது எல்லாப்பிராணிகளுக்கும் உயர்ந்ததான இடம். பலவாறான ஜன்மங்களில் பிறந்து ஏதாவது ஒரு ஸமயம் பிறக்குங் காலத்தில் பிராமணனாகப் பிறக்கின்றான். அந்தவிஷயமாக முன்னொருகாலத்தில் நடந்தஒரு சரித்திரத்தைக்கூறுகிறேன் யுதிஷ்டிரா என்றுசொல்லத்துடங்கினார். ஒருபிராமணனுக்கு ஸமான ஜாதியான ஒரு புத்திரன் பிறந்தான். அவனுக்கு மதங்கனென்று பெயர். ஆனால் அதிக குணமுள்ளவனாகவுமிருந்தான், ஒருநாள் அவன் பிதாவானவர் அவனைப் பார்த்து நான் யாகம் செய்யவேண்டும் அதற்கு சாதனமான சாமான்களை நீ ஸம்பாதித்து வா என்றுசொன்னார். உடனே மதங்கர் அதி வேகமாக ஓடக்கூடிய இரண்டு கழுதைகள் கட்டின ஓர் தேரில் ஏறிக்கொண்டு ஓட்டிக்கொண்டும் வரும்வழியில் இந்த கழுதைகளின் தாயாயிருக்கும் கழுதை நின்றுகொண்டிருப்பதைப்பார்த்து தேரையும் இழுத்துக்கொண்டு ஓடிற்று. அதைக்கண்ட மதங்கர் இந்தக்கழுதைகளின் மூக்கிலேயே கொரடாவினால் அடிக்கடி அடித்து தொந்தரவு செய்தார் மூக்கில் ரொப்பவும்விரணமேற்பட்டிருந்ததைப் பார்த்த தாயாகிய கழுதையானது ஓ குழந்தைகளே நீங்கள் வருந்தப்படாதீர்கள். தேரிலேறிக்கொண்டிருப்பவன் சண்டாளன் பிராம்மணனாக இருந்தால் குரூமான காரியத்தைச் செய்யமாட்டான். பிராம்மணன் யாவருக்கும்மித்திரபாவமுள்ளவனென்று சொல்லப்படுகிறான். அவன் உலகிலுள்ள பிராணிவர்க்கங்களனைத்துக்கும் அவன் ஆசானென்றும் சிக்ஷிப்பவனென்றும் கூறப்பட்டிருக்கிறது. அவன் இப்படி அடிப்பானா? இவனோ பாபஸ்வபாவமுள்ளவன். குழந்தைகளென்று நினைப்பும்கருணையுமில்லாதவன். தன் பிறப்பை அகௌரவப்படுத்திக்கொள்ளுகிறான். பிறப்பை அநுஸரித்து நடப்பைக் காட்டுகிறான் என்று தாய் கழுதைசொன்ன வார்த்தையைக்

கேட்ட மதங்கர் தேரிலிருந்து கிழே இறங்கி பெண் கழுதையை நோக்கிச் சொன்னர்.

ब्रूहिरासभि कल्याणि माता मे येनदूषिता ।
कथंमां वेत्सिचण्डालं क्षिप्रं रासभि शंस मे ॥
कथंमां वेत्सि चण्डालं ब्राह्मण्यं येन नश्यति ।
तत्वेनैतन्महाप्राज्ञे ब्रूहि सर्वमशेषतः ॥

ஓ கொர்தபியே என் தாயார் எவனல் தோஷமடைந்தாள், என்னை சண்டாளனென்று எப்படி அறிகிருய் பிராம்மண்யமானது எவனுல் நாசமடைந்தது இதனுண்மையை விளங்கும்படி எனக்கு சொல்லு என்று கூறினன். அப்பொழுது கொர்தபியும் நாவித கர்மாவைச் செய்கிற ஒரு சூத்திரனல் காமவசமாயிருந்த உன் தாயினிடத்தில் பிறந்தாய். ஆகையால் நீ சண்டாளனுகி விட்டாய். பிராம்மண்யமும் நசித்துவிட்டது என்று கூறிவிட்டது. உடனே மதங்கர் தன் வீட்டுக்குவந்து தகப்பனென்று நினைத்துக்கொண்டிருக்கும் பிராம்மணனைப் பார்க்குங்காலத்தில் யாகத்துக்கு வேண்டிய சாமான்களை சேகரிக்கும்பொருட்டு உன்னை அனுப்பினேன் நீ ஏன் சிக்கிரம் திரும்பிவிட்டாய்என்றுகேட்டார். அதற்கு மதங்கரும் சண்டாள ஜன்மத்தை அடைந்தவனும் ஈனஜன்மத்தை அடைந்தவனும் எப்படி க்ஷேமமுள்ளவனுகயிருப்பான். எவனுக்கு மாதாவானவள் இந்தவிதம் தோஷமுள்ளவளாகயிருக்கிருளோ அவன் குசலியாயிருக்கமுடியுமா? ஒரு பெண்கழுதையானது தேவவாக்கினல் என்னைப்பார்த்து பிராமமண ஸ்திரீயிடம் சூத்திரனுல் ஜனித்தவன் என்று தெரிவித்தது. ஆகையால் ரொம்பவும் வருத்தப்படுகிறேன் என்று சொல்லி பெருங்காட்டைக்குறித்து தபம் செய்வதாக நிச்சயித்துக்கொண்டு போய் அவ்விடத்தில் கோரமான தபம் செய்தான். தேவர்களுக்கும் பயம் உண்டாகும்படியான தவத்தைச்செய்து உயர்ந்த பதவியை அடையவிரும்பினன். இப்படி தவம் செய்துவரும் மதங்கரிடத்தில் தேவேந்திரன் வந்து மானிடலோகத்தில் அடையவேண்டிய போகங்களைவிட்டு ஏன் இப்படி தபம் செய்கிருய். உனக்கு இஷ்டமான வரனைக்கேளு. தாமதிக்காதே. நான் தருகிறேன் என்று சொன்னர். உடனே பிராம்மண்யத்தை விரும்பிக்கொண்டுஇந்த தபம்செய்கிறேன். அந்தவரனை எனக்

குக்கொடுத்தால் நான்போய் விடுகிறேனென்று மதங்கர்கூறினார். இதைக் கேட்ட இந்திரன் ஓ மதங்க நீ பிராம்மண்யத்தை விரும்புகிறாய். அது உன்னால் அடையமுடியாது. பாபிகள் அடையமுடியாத இந்த பிராம்மண்யத்தை விரும்பி நீ தபம் செய்கிறாய். உனக்கே நாசமுண்டாகிவிடும். ஆகையால் இனி தபம் செய்யவேண்டாம். சகலப்ராணிகளுக்கும் உத்தமமானஸ்தானமாகையால் தபத்தினால் அதை அடையமுடியாது. விருதாவாகநசிக்கவேண்டாம். தேவர்கள் அசுரர்கள் மனிதர்கள் இவர்களுக்குள் எது பரிசுத்தமானதோ உத்தமமானதோ அப்படிப்பட்டதைசண்டாளயோனியில் பிறந்தவனால் அடையமுடியாது என்று சொன்னார். அதைக் கேட்டமதங்கர் திரும்பவும் கடுமையான நியமங்களுடன் நூறுவருஷம் கடுந்தவச்செய்தார்.

அவனைப்பார்த்துஇந்திரன் திரும்பவும்இவனிடம்வந்து துர்லபமான பிராம்மண்யத்தை நீ அடையமுடியாது. இதை நீ விரும்பாதே. இதுவுனக்கு தர்மமார்க்கமல்லஎன்வார்த்தையைமீறி அடிக்கடித்தடங்கல்செய்யப்பட்ட நீ மறுபடியும்தபம்செய்து அடைந்துவிடலாமென்று முயர்ச்சிகொள்வாயாகில் நிச்சயம் நாசமடைவாய் என்று சொல்லிவிட்டு மறுபடியும் இந்திரன் சொல்லுகிறார். பசு பட்சி விருக்ஷம் முதலியவைகள் மானிடப்பிறப்பாக பிறக்குமேயானால் புல்கஸன் என்று சொல்லப்படுகிற பாபஜென்மாவில் பிறக்கின்றன. இந்த ஜன்மத்திலேயே ஆயிரவருஷம் வரையில் அந்த ஜாதியிலேயிருந்து பிறகு சூத்திரனாகப் பிறக்கிறான் அதில் முப்பதாயிரம் வருஷம் வசித்து பிறகு வைசியனாகப் பிறக்கிறான். அதில் அறுபதாயிரம் வருஷமிருந்து க்ஷத்திரிய ஜாதியாகப் பிறக்கிறான். அதில் அருபதாயிரம் வருஷமிருந்து பிரம்மபந்துவாகப்பிறக்கிறான். அதில் இருநூருவருஷம் வகித்துகாண்டபிருஷ்டனாக பிறக்கிறான். அதிலிருந்து முன்னூரு வருஷங்களுக்குப் பிறகு ஜாபகனாகப் பிறக்கிறான், நானூறு வருஷத்துப்பிறகு ச்ரோத்ரியனாகப் பிறக்கிறான். இந்த சமயத்திலும் துக்கம்சந்தோஷம் காமம் துவேஷம் அதிக கர்வம் அதிவாதம் இவைகள் ஏற்பட்டுவிடும். அவைகளை சத்துருக்களென்று நினைத்து தன்னிடத்திலணுகாமல் செய்து ஜெயித்துவிட்டானாகில் நற்கதி அடைகிறான். அவைகளை ஜெயிக்க முடியாவிட்டால் பனம்பழம்போல் கீழே விழுந்துவிடுகிறான்.

ஆகையால் மதங்கரே நான்சொன்ன விஷயங்களை மனதில் தீர்மானித்துக்கொண்டு பிராம்மண்யத்தைத்தவிர வேறு உனக்கு வாணுகக்கேளு இஷ்டமானதை தருகிறேனென்றுசொன்னர். இப்படிசொல்லியும் மதங்கர் நியமத்துடன் ஆயிரம் வருஷம் ஒரேகாலினுல்நின்றுகொண்டுகடுந்தபம் செய்தார். அப்பொழுது இந்திரன் அவனிடம்வந்தான். முன்னம் கூறியதுபோலவே கூறினுன். இவ்வளவு கடுந்தபம்புரிந்து பிராம்மண்யத்தைநான் அடையவில்லையே அதற்குக் காரணமென்னவென்று கேட்டான். சண்டாள யோனியில் பிறந்தவனுல் அடையமுடியாது. விருதாவாக இந்த சிரமம்வேண்டாம். வேறு வரணைக்கேளென்று இந்திரன் சொல்லதைக்கேட்டு அதிக வருத்தத்துடன் கெயா க்ஷேத்திரத்தில் நூறுவருஷம் கால் கட்டைவிரலைமாத்திரம் பூமியில் நிறுத்திக் கொண்டு தபம் செய்தான். இந்தத் தபோயோகத்தினுல் சரீரம் தாங்காமல் இளைப்படைந்து கீழே விழுந்து விட்டான். உடனே இந்திரன் அவனைத் தூக்கிவிட்டு எவ்வளவோ ஜன்மாக்களை எடுத்து புண்யங்களை செய்துவந்து ஏதோ ஒரு சமயத்தில் பிராம்மண்யத்தை அடையமுடியும். நீ இதை விரும்பாதே என்று சொன்னதும் மதங்கன் ஓ இந்திரரே நான் மகா துக்கத்தினுல் மரித்தவனுக்கு சமானமாகயிருக்கிறேன். அப்படியிருப்பவனை திரும்பவும் கொல்லுகிறீர்.

(தொடரும்) S. கச்பேச்வர சாஸ்திரி,

---

## வாரவிருத்தாந்தம்.

நல்லவனுக்கு நல்லது தோன்றும்:— 'துர்யோதனனையும் தர்மனையும் பரீக்ஷிக்க ஊரிலுள்ள நல்லவர் கெட்டவரைக் கணக்கெடுத்துவா என்றனர். முதல்வன் எல்லோரும் அயோக்யரென்றுன், தர்மரோ எல்லோரும் நல்லவரென்றுர். இதிலிருந்து இவர்களது குணகுணத்தை நிச்சயித்தனராம். இதே போல் கும்பகோணத்தில் 31௳ கூடிய முஸ்லீம் ஸபையின் தலைவர் இந்தியர் எல்லோரையும் இந்தியராக்குகின்றனர் என புதிதாக புகார் கூறினர். ஆரிய பிரும்மஸமாஜ ஸங்கத்தார்களைத் தவிர அன்ய

மதம் புகுந்து ஸ்வமதத்திற்கு வர ஆவல்கொண்டவர்களைக்கூட சேர்க்கும் இந்தியரில்லை. பாதிரிகள் ப்ரகாசமாகவும் முஸ்லீம்கள் கூடமாயும் ப்ரகாசமாகவும் நயபய பலாத்காரங்களாலும் ஹிந்துக்களை ஸ்வமதத்தில் சேர்க்கின்றனர். சேர்த்தனர். அந்த வாஸனையால் அங்ஙனம் கூறினர் போலும்.

அவ்வளவு கெடுதலில்லை:— இக்கலியின் விலாசத்தால் தீண்டாதாரை நாம் ஹிம்ஸிப்பதாக பலருள்ளத்தில் ஓர்தர்மாபாஸஎண்ணம் தாண்டவமாடுகிறது. தீண்டாமையகற்ற பல துர்மார்க்கங்களை பலர் உபதேசித்து வருகின்றனர். அவர்களுக்குள் 30உ. திருச்சியில் கூடிய சண்டாளக் கூட்டத்தின் தலைவர் நாராயண பிள்ளை என்பார். உங்கள் சாந்தகுணத்தாலும் அடக்கத்தாலும் ஒழுக்கத்தாலும் அதை அகற்ற முயலவேண்டும். இல்லையேல் த்வேஷமும் பணநஷ்டமும் மற்றும்பல துன்பமும்வருமென்கிறார். இவரது உத்தேசம் சாஸ்திரவிரோதமாதலின் நாமதை ஏற்கமுடியாது. ஆயினும் இவர் சொல்லும் வழியையேமற்றவரும்கூறில் அனுவசியமான அடிதடி முதலியவைகளை நிறுத்தலாம்.

ஸந்தோஷிப்பதா துக்கிப்பதா ?:— சென்றவாரம் மதுரையில் ஸௌராஷ்ட்ரசபை கூடிற்று. தலைவர்கள் தாங்கள் பிராமணர்களே ஆன்ஹிக கர்மாக்களையும் ஸதாசாரத்தையும்கைப்பற்றவேண்டும். பெண்மக்கள் வீட்டில் வேலையை கவனித்து பாதிவிருத்யதைக் காக்கவேண்டும். தீண்டாதாரிடம் தீண்டாமையை அனுஷ்டிக்கவேண்டும் என பூர்ணபிராமணதர்மத்தைச்சொல்லியிருக்கின்றனர். பிராமணன் என்றுகூடசொல்ல அஞ்சுமிக்காலத்தில்துணிந்து பிராமணதர்மத்தைக் கூறி நமக்குரிய ஸம்பாவனையைப்பெற முன்வந்ததற்கு ஸந்தோஷம். ஆனால் பௌத்தாதிகள் கூறும் அஹிம்ஸா தர்மம் நமக்குசிதமானதால் அதை ஏற்கலாமாவென்று ஸந்தேஹித்து பாலேயானாலும் தகாத பாத்திரத்திலிருந்தால் ஏற்கத்தக்கதல்லதென சாஸ்திரம் கூறிற்று நம்மவர் இத்தர்மத்தை காக்க முன் வரவில்லையே என துக்கம்.

ஸத்ஸங்கல்பம்:— மாயவரத்தில் ஸ்ரீவாசுதேவயதீந்திராள் தர்மமார்க்கத்தை உபதேசித்து ஸம்ரக்ஷித்து வந்தார். கலி 5000-த்திற்கு பிறகு யாகம் வேண்டாமென ஓர் ஸ்மிருதிவாக்யத்தைக் கொண்டு பண்டிதர்களில் சிலரே யாகத்தை வெறுத்துவந்தும்

கலிகோலாஹலத்தால் பிராமணரும் ஏனையோரும் எதிர்க்கும் யக்ஞத்தால் ஸத்பிராஹமண்யமும் சித்த சுத்தியும் லோகக்ஷேமமும் உண்டாகுமென்றுதானே தள்ளாதவயதிலும் கூட இருந்து ஏழு எட்டு யாகங்களை நடத்திவைத்தார். அவாள் சித்தியடைந்தும் அவாள் ஸத்ஸங்கல்பமும் ஸித்தியடைகிறது. சென்ற பௌர்ணமியில் முன் நடந்தவிடத்திலேயே ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி அய்யர்பி.ஏ. என்பார் ஸோமயாகம் செய்தார். ஆங்கிலங்கற்றோரிங்கு சற்று உற்று நோக்கட்டும். ஸந்தியாவது ஒழுங்காகஅனுஷ்டிக்கட்டும்.

பழயபல்லவி:— மதுரையில் பல ஆயிரரூபாய்களைச் செலவு செய்து பல்லாயிர ஜனங்கள் ஒன்றுகூடி தமிழ்நாட்டு மாகாண காங்க்ரஸ் ஸபை நடத்தினர். தலைவர்கள் வாசாமகோசாரமாய் பேசினார்கள். பத்திரிகைகளும் பத்திபத்தியாய் எழுதின. தீண்டாமை ஜாதி பேதமகற்றல் முதலிய பழய பாட்டுகளை மறக்காமல் பாடினர். ஸ்வேதசக்கல்வி ஸதாசாரம் தர்மம் முதலியவைகளைப்பற்றி மருந்துக்குக்கூட ஒரு சொல்லைக்காணோம் எத்துணை சபைகூடினும் எவ்வளவு தனம் செலவழித்தாலும் தர்மவழி நிற்காதஸபை ஸபையாகாது. தர்மத்தைக் காத்தாலன்றி தன்னையும் நாட்டையும் கார்க்க முடியாது.

ஸமயத்தை இழந்தனர்:— மதுரைவாசிகளில் ஆஸ்திகர் வைதிகாபிமானிகள் பலரிருந்தும் தேசீய சபை கூடியகாலத்தில் வர்ணாச்ரம ஸபை அல்லது பிராமணசபை சுலபமாகக் கூட்டியிருக்கலாம். தேசீய ஸபையிலுள்ள பல அங்கத்தினர் வர்ணாச்ரம தர்மாபிமானிகள் என்பதை சென்னையில் காங்க்ரஸ் நடந்தபோது வர்ணாச்ரம சபையில் அனுபவபூர்வமாகக் கண்டோம், சிறிது முயற்சி செய்திருந்தால் ஸபை நடத்தியிருக்கலாம். நடத்த தக்க வைதிக லௌகிகர்கள் பலரிருந்தும் ஒற்றுமையில்லாது தக்க சமயத்தை இழந்ததற்கு வருந்துகிறோம்.

வே. ஸோமதேவசர்மா.